# NATIONAL SERVICE SCHEME

# ANNUAL REPORT
# FOR
# 2018 – 2019

**H.H. THE RAJAH'S COLLEGE** **(Autonomous B+)**

***(Affiliated Bharathidasan University, Tiruchirappalli)***

**PUDUKKOTTAI – 622 001**

**On 29th September 2018**

புதுக்கோட்டை



புதுக்கோட்டையில் நடந்த தூய்மை சேவை குறித்த விழிப்புணர்வு முகாமை, கலெக்டர் கணேஷ் தொடங்கி வைத்து தூய்மை பணிக்கான உபகரணங்களை வழங்கியபோது எடுத்த படம்.

சுற்றுலா தலங்களை

# தூய்மையாக பராமரிக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## கலெக்டர் கணேஷ் பேச்சு

புதுக்கோட்டை, செப்.30-

சுற்றுலா தலங்களை தூய்மையாக பராமரிக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என கலெக்டர் கணேஷ் கூறினார்.

### விழிப்புணர்வு முகாம்

புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் தூய்மை சேவை குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த முகாமிற்கு கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கி, தூய்மை பணிகளை தொடங்கிவைத்து, அதற்கான உபகரணங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசுகையில், தமிழக முதல்-அமைச்சர் சுற்றுலாத் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தமிழகத்தில் உள்ள சுற்றுலா தலங்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியதன் பயனாக இந்தியாவில் சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்ப்பதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில், அனைத்து சுற்றுலா தலங்களும் தொடர்ந்து தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுலா தலங்களில் தூய்மையின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் புதுக்கோட்டை மன்னர் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் சார்பில் தூய்மைப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது.

### தூய்மையாக பராமரிக்க...

புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல், குடுமியான்மலை, நார்த்தாமலை, ஆவுடையார்கோவில், குன்றாண்டார்கோவில், கொடும்பாளூர், திருக்கோகர்ணம், திருமயம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் புகழ் பெற்ற சுற்றுலா தலங்கள் உள்ளன. சுற்றுலா தலங்களில் பயணிகள் வருகையை அதிகரிக்கும் வகையில் அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் தூய்மையாக பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுற்றுலா தலங்களுக்கு வரும் பொதுமக்கள் இதன் மூலம் உரிய விழிப்புணர்வு பெற்று சுற்றுலா தலங்களில் தேவையற்ற குப்பைகள் போடுவதை தவிர்த்து தூய்மையாக பராமரிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து கல்லூரி மாணவர்கள் கலெக்டர் அலுவலக வளாகத்தில் பல்வேறு தூய்மை பணிகளை மேற்கொண்டனர். இதில் மாவட்ட சுற்றுலா அதிகாரி இளங்கோவன், மன்னர் கல்லூரி பேராசிரியர் வேலு, நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**NSS Officer Prof. Velu participated in Swachh Bharat Programme inaugurated by Pudukkottai District Collector**

**On 10th October 2018**





**Campus Cleaning**





**On 29th December 2018**



திருச்சி 30-12-2018 **15**

நடிகை ஏஞ்சலினா ஜோலி அரசியலில் குதிக்கிறார்

செய்தி 18-ம் பக்கம்

## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

புதுக்கோட்டை, டிச.30-

'பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு' என்பதை வலியுறுத்தும் விதமாக, பிளாஸ்டிக் பொருட்களை ஒழிப்போம் என்ற விழிப்புணர்வு ஊர்வலம் புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் இருந்து நேற்று தொடங்கியது. ஊர்வலத்தை கலெக்டர் கணேஷ் தொடங்கி வைத்து பேசுகையில், பொதுமக்கள், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து துணிப்பை அல்லது சணல் பைகளை பயன்படுத்த வேண்டும். உணவகங்களில் பொருட்களை வாங்க செல்லும்போது அதற்குரிய துணிப் பைகள், பாத்திரங்கள் எடுத்து செல்ல வேண்டும். இதேபோல வர்த்தக நிறுவனங்கள், உணவகங்கள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்து மாற்று பொருட்களை உபயோகிக்க வேண்டும். தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும். எதிர்கால தலைமுறையினருக்கு மாசு இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டியது நமது கடமையாகும். பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் மகளிர் சுய உதவி குழுவினர் காகித பைகள், துணி பைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். தேவைப்படும் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் அவர்களை தொடர்பு கொண்டு தங்களுக்கு தேவையான துணி மற்றும் காகித பைகளை பெற்று கொள்ளலாம் என்றார். பின்னர், கலெக்டர் கணேஷ், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு செல்வராஜ், மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் காமராஜ், நகராட்சி ஆணையர் சுப்பிரமணியன் ஆகியோர் ஊர்வலத்தில் நடந்து சென்றனர். கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற இந்த விழிப்புணர்வு ஊர்வலம் பழைய பஸ் நிலையம், அண்ணாசிலை, கீழராஜவீதி வழியாக சென்று டவுன்ஹாலில் நிறைவு பெற்றது. இதையடுத்து அங்கு தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக எந்த மாற்று பொருட்களை பயன்படுத்தலாம் என்பது குறித்த விழிப்புணர்வு கண்காட்சி நடைபெற்றது.

**NSS Volunteers participated 'Ban on Plastic Usage Awareness' programme**

**On 25th January 2019**





**Campus Cleaning**

**On 6th February 2019**



**NSS Officer Dr. S. Anbazhakan (Unit - IV) along with NSS Volunteers**



**Campus Cleaning**



**NSS Officer Prof. V. Velu (Unit - I) along with NSS Volunteers**



**Campus Cleaning**





**Campus Cleaning**

## On 8th February 2019



னர்.

### மதுவால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம்

புதுக்கோட்டை, பிப்.9–

மது அருந்துதல் மற்றும் சாராயத்தினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் புதுக்கோட்டை பழைய பஸ் நிலையம் அருகே உள்ள பொது அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. ஊர்வலத்தை மாவட்ட வருவாய் அதிகாரி ராமசாமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், கலால் உதவி ஆணையர் கார்த்திகேயன், தாசில்தார் பரணி, போலீஸ் இன்ஸ்பெக்டர் வாசுதேவன் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். ஊர்வலம் பொது அலுவலக வளாகத்தில் தொடங்கி, பழைய பஸ் நிலையம், அண்ணாசிலை, கீழராஜவீதி, பிருந்தாவனம் கார்னர் வழியாக

**NSS Volunteers participated ‘Alcohol Abuse Awareness’ programme**

**On 28th February 2019**



**In memory of the former Chief Minister Amma J. Jayalalithaa, Tree Plantation was done in the college campus by NSS Programme Office Dr. Velu Suresh Kumar (Unit - II)**








**7 Days Special Camp at H.H. The Rajah's College**

**(23/03/2019 to 29/03/2019)**

**On 23th March 2019**






NSS **Volunteers on the Inaugural Function**



**Dr. J. Suganthi (Principal) Dr. A.S. Nagaeswaran (Syndicate Member of BDU& COE of HHRC) attended the Inaugural Function**

**On 24th March 2019**




**NSS Programme Officer Prof. V. Velu (Unit - I) along with NSS Volunteers**





NSS **Volunteers were cleaning Naganathar Temple at Peraiyur Village, Pudukkottai District**

**On 25th March, 2019**





**Cleaning College Campus**





**Cleaning Brahadambal Temple Campus in Pudukkottai Town**




**Chief Guest Dr. V. Gurusamy addressing a topic on 'Natural Farming'**




**Chief Guest Dr. A. Gandhi addressing a topic on 'Alcohol Abuse Awareness'**

**On 26th March 2019**





**On 27th March, 2019**





**On 28th March, 2019**





**Chief Guest Dr. B. Balamurugan addressing a topic on 'Entrepreneurship Development'**



**Chief Guest Dr. S. Alagumanian addressing a topic on 'Environmental Protection Awareness'**



**Dr. Ramesh Babu, Department of Food Safety, Pudukkottai Distict**


நாட்டு நலப்பணித்திட்டம்



**On 29th March 2019**



**Dr. J. Suganthi (Principal) & Dr. A.S. Nagaeswaran (Syndicate Member of BDU & COE of HHRC) attended the Valedictory Function**







**Dr. J. Suganthi (Principal) honouring the NSS Voluntary for their best performance in the special camp**

டது.

# நாட்டு நலப்பணி திட்ட முகாம் நிறைவு

புதுக்கோட்டை, மார்ச்.30-

புதுக்கோட்டையில் உள்ள மன்னர் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்ட முகாம் கடந்த 23-ந் தேதி தொடங்கியது. இதில் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் வேலு, வேலுசுரேஷ்குமார், பாலசுப்ரமணியன், அன்பழகன் ஆகியோர் தலைமையில் சுமார் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்லூரி வளாகம், பேரையூர் நாகநாதசுவாமி கோவில், புதுக்கோட்டை



பிரகதாம்பாள் கோவில் உள்பட பல்வேறு பகுதிகளில் தூய்மை பணியில் ஈடுபட்டனர். இந்த முகாமின் நிறைவு நாள் விழா நேற்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் சுகந்தி தலைமை தாங்கினார். இதில் பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப்பணி திட்ட குழும ஒருங்கிணைப்பாளர் இலக்குமி பிரபா கலந்து கொண்டு, கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். இதில் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**Dr. J. Suganthi (Principal) & Dr. A.S. Nagaeswaran (Syndicate Member of BDU & COE of HHRC) Planted Tree at the end of NSS Special Camp Valedictory Function**

**27th March 2019**



தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்று ஓடியவர்களை படத்தில் காணலாம்.

## தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி

# விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்

புதுக்கோட்டை, மார்ச்.28- தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

### மாரத்தான் ஓட்டம்

நாடாளுமன்ற தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாரத்தான் ஓட்டம் புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. மாரத்தான் ஓட்டத்தை மாவட்ட கலெக்டர் உமா மகேஸ்வரி தொடங்கி வைத்தார். புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்திலிருந்து தொடங்கிய வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் பழைய பஸ் நிலையம், கீழராஜா வீதி, பிருந்தாவனம், பால் பண்ணை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, புதிய பஸ் நிலையம் வழியாக மீண்டும் பொது அலுவலக வளாகத்தை வந்தடைந்தது. இந்த மாரத்தான் போட்டியில் 800-க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். அவர்களுடன் கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டு செல்வராஜ் ஆகியோரும் ஓடினர்.

### விழிப்புணர்வு நடவடிக்கைகள்

இதைதொடர்ந்துகலெக்டர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து பல்வேறு தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்காளர்களும் வாக்களிக்க வேண்டியதை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2016-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது 77.37 சதவீதமும், 2014-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது 76.45 சதவீதமும் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரை

சடுபட்டனர்.

மற்றும் ஆலோசனை
படி வாக்காளர்கள் அ
ரும் விடுபடாமல் வாக்
பதை வலியுறுத்தி அ
தாலுகாக்களிலும்
லங்கள்; இருசக்கர வ
ணர்வலம், மனித ச
துண்டு பிரசுரங்கள், ப
கள், சுவரொட்டிகள் ஆகி
மூலம் விழிப்புணர்வு ஏ
தப்பட்டு வருகிறது.

### வாக்குகளை தவறா பதிவு செய்ய வேண்

18 வயது முதல் 21
வரையிலான வாக்
களின் வாக்குப்பதிவை
கரிக்கும் விதமாக க
மாணவ, மாணவிக
பேச்சு போட்டி, பே
போட்டி, விளையாட்டு
டிகள் நடத்தப்பட்டு பரி
வழங்கப்படுகிறது.
சந்தை, தினசரி சந்தை, வ
வளாகங்கள் மற்றும் அ
வங்கி ஏ.டி.எம். மைய
லும் விழிப்புணர்வு நட
கைகள் மேற்கொள்ளப்
வருகிறது. இதுதவிர
கோட்டை மாவட்ட
உள்ள அனைத்து பகு
லும் பொது மக்கள் வா
பதிவு எந்திரத்தை பயன்
துவது குறித்து நேரடி
விளக்கம் அளிக்கப்
வருகிறது. எனவே
காளர்கள் ஏப்ரல் 18-
நாடாளுமன்ற தேர்
போது தங்களது வாக்கு
தவறாமல் பதிவு செய்ய
டும் என வலியுறுத்தி கே
கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி
இதில் மாவட்ட வரு
அதிகாரி ராமசாமி,
கோட்டை வருவாய்
டாட்சியர் தண்டாயுதப
வட்டாட்சியர் (தேர்தல்)
மலை, வட்டாட்சியர் ப
மற்றும் அரசு அலுவல
கலந்து கொண்டனர்.

**NSS Volunteers participated in the Voter Awareness Marathon**